153

என்சபி/சிகூ/பொது/02

09-12-2003

44

26

சுற்றிக்கை இல: 10/2003

சகல கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களுக்கும்.
மட்டக்களப்பு மாவட்டம்.

## கூட்டுறவு நிதி அறவீடும் பயன்பாடும்

**01. கூட்டுறவு நிதி :**
கூட்டுறவுச் சங்கங்களின் சட்ட விதிகளின் பிரகாரம் சங்கங்களின் கணக்காய்வின் போது ஒதுக்கப்படும் கூட்டுறவு நிதி மாகாண ஆணையாளரின் கூட்டுறவு நிதிக்கணக்கில் வைப்பிலிடப்பட்டு இந்நிதி சட்ட ஏற்பாடுகளின் கீழ், பின்வரும் நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படலாம்.

1. கூட்டுறவு கல்வி, பயிற்சி விசாலிப்பு
2. கூட்டுறவுச் சங்கங்களின் முகாமைத்திறனை விருத்திசெய்தல்.
3. பலமான கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்தி.
4. பலமற்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவியளித்தல்.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்திலும் இந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கூட்டுறவு நிதியை அறவீடு செய்யும் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்நிதி அறவீடு தொடர்பான முகவராகச் செயலாற்ற மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவுச் சபைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எல்லாச் சங்கங்களும் இந்நிதியை அறவிடுவதில் வேண்டிய ஒத்துழைப்பினை கூட்டுறவுச் சபைக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கூட்டுறவு நிதியை அறவிடுதல், பகிர்தல், கணக்குவைத்தல் தொடர்பான விதிமுறைகள் பின்வருமாறு.

**02. ஆலோசனைச்சபை :**

2.1 மாவட்ட கூட்டுறவுச் சபையின் நெறியாளர் குழுவில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஐவர் அடங்கிய உபகுழுவொன்று இந்நிதி அறவீடு, நிதிப்பகிர்வு, கணக்குவைத்தல் என்பன தொடர்பான ஆலோசனைச் சபையாக இருக்கும்.

**03. அறவீடுகள் :**

3.1. இறுதியாகக்கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ள கூட்டுறவு நிதியினை மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவுச் சபையிடம் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டினை சகல சங்கங்களும் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்

3.2. பெருந்தொகையான பணம் நிலுவையிலுள்ள சங்கங்களைத்தவிர ஏனைய சங்கங்கள் ஒரேதடவையில் அவற்றைச் செலுத்தி முடித்தல் வேண்டும்.

3.3. இவ்வாறு அறவிடப்படும் நிதிகள் யாவும் மக்கள் வங்கியில் தனியான சேமிப்புக் கணக்கொன்றில் மாவட்ட கூட்டுறவு சபையால் உடனுக்குடன் வைப்பிலிடப்படும்.

3.4. காசோலைகள் மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவுச் சபையின் பெயரிலே வழங்கப்படலாம்.

(152)

(25)

**04. நிதிப்பகிர்வு :**

4.1. அறவிடப்படும் நிதியில் 60% மாவட்டத்தின் கூட்டுறவு அபிவிருத்திப் பணிகளுக்காகப் பகிர்ந்தளிக்கப்படும். இப்பகிர்வு மேற்படி ஆலோசனைச் சபையின் தீர்மானத்துடன் உதவி ஆணையாளரது சிபார்சின் அடிப்படையில் ஆணையாளரால் அனுமதிக்கப்பட்ட பின்னரே மேற்கொள்ளப்படும்.

4.2. கூட்டுறவுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஆணையாளரால் அனுமதிக்கப்படும் நோக்கங்களுக்கு மட்டுமே இந்நிதி வழங்கப்படும்.

4.3. இப்பகிர்வுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு பகிர்வுத்திட்டமொன்றை ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் ஆலோசனைச்சபை தயாரித்து வழங்கும். இத்திட்டம் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டதும் அத்திட்டபடி நிதி பகிர்ந்தளிக்கப்படும்.

**05. கணக்குவைத்தல் :**

5.1 அறவீடுகள் தொடர்பாக ஒவ்வொரு சங்கத்தின் பெயரிலும் தனித்தனி கணக்குகள் மாவட்ட கூட்டுறவுச் சபையால் பேணப்படல் வேண்டும்.

5.2. கொடுப்பனவுகள் யாவும் காசோலை மூலமே வழங்கப்படல் வேண்டும்./ இந்நிதி மூலம் செய்யப்படும் கொடுப்பனவு காசோலைகள் யாவும் மட்டக்களப்பு உதவி ஆணையாளரால் மேலொப்பமிடப்படும்.

5.3. இவ்வேலைகளை செயற்படுத்த ஏற்படும் செலவை ஈடுசெய்யும் பொருட்டு அறவிடப்படும் மொத்த நிதியில் 3% மாவட்ட கூட்டுறவுச் சபைக்கு தரகுப்பணமாக வழங்கப்படும்.

5.4. இதன் பின்னர் எஞ்சும் தொகையான 37% மும் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

5.5. மக்கள் வங்கியில் பேணப்படும் சேமிப்புக்கணக்கிற்கு வருடாந்தம் வழங்கப்படும் வட்டித்தொகையும் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**06. அறிக்கையிடல் :**

அறவீடுகள், கொடுப்பனவுகள் தொடர்பான மாதாந்த அறிக்கைகள் உதவி ஆணையாளர் ஊடாக அடுத்துவரும் மாதம் 10ந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு ஆணையாளருக்கு அனுப்பட்டல் வேண்டும்.

**இ.இளங்கோவன்,**
**கூ.அ.ஆணையாளரும்,**
**கூ.ச.பதிவாளரும்(வகி).**

பிரதி: 1. கூ.அ.உ.ஆணையாளர், மட்டக்களப்பு. – வேண்டிய நடவடிக்கையின் பொருட்டு.
2. பொறுப்பாளர், தமிழீழ நிர்வாகசேவை, மட்டக்களப்பு. - தகவலுக்காக.